**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020
Prosecution witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.ரமேஷ் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

Accused are present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். இறந்து போன ராமநாதன் என்னுடன் கோவையில் கோடாங்கிபாளையத்தில் அறையில் தங்கியிருந்தார். என்னுடன் 1 வாரம் அறையில் தங்கியிருந்தார். அவர் Leeshark என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். 12.03.2019 அன்று காலை 7 மணியளவில் ஊருக்கு சென்று விட்டு வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு பல்லடத்தில் இருந்து கிளம்பினார். பின்னிட்டு ராமநாதனின் அக்கா முத்துமாரி என்பவர் என் கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு ராமநாதன் கிளம்பிவிட்டாரா என்று கேட்டார். பின்னிட்டு அ.சா.1ம் என்னை தொடர்பு கொண்டு ராமநாதன் ஊருக்கு கிளம்பிவிட்டாரா என்று கேட்டார். காலையிலேயே கிளம்பி சென்றுவிட்டதாக சொன்னேன். பின்னிட்டு ராமநாதன் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இறந்து போன நபரின் சொந்த ஊர் குருவிக்குளம். நாங்கள் இருவரும் சொந்த ஊரில் இருந்து சுமார் 400 கி.மீ தள்ளி வேலை செய்து

வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் கோவையில் செய்த வேலை உள்ளூரிலேயே கிடைக்கும் என்றால் சரிதான். நான் கோவையில் குடியிருந்ததாக ஆதாரத்தை யாரிடமும் கொடுக்கவில்லை. நானும் மேற்படி ராமநாதனும் கோவையில் குடியிருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவர் எப்போதாவது ஊருக்கு கிளம்பிவிடுவார் என்றும் 2,3 நாள்கள் கழித்து தான் அதுபற்றி எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரிதான். இறந்து போன நபர் என் நண்பர். அதனால் முதல் விசாரணை சங்கதிகளை உண்மைக்கு புறம்பாக சாட்சியமாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அ.சா.1ம் முத்துமாரியும் தனித்தனியாக தான் என்னிடம் கைப்பேசியில் பேசினார்கள். முத்துமாரி முதல் நாள் என்னிடம் பேசினார். மறுநாள் அ.சா.1 என்னிடம் பேசினார். அந்த விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.